


சகலகலாவல்லி மாலை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

சகலகலாவல்லி மாலை

—மூலமும் உரையும்—

[இப்பாடல்களைத் தினந்தோறும் பக்தியோடு பாடுபவர்களுக்குக் கலைமகள் அருள் கிடைக்கும். பற்பல கலைகளிலும் சிறப்புற்று விளங்குவர்.]

பதிப்பாசிரியன்
வெற்றிச் செல்வன்

ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு
திருவல்லிக்கேணி : : சென்னை - 600 005
போன் : 844740

முதற் பதிப்பு : அக்டோபர், 1979
நான்காம் பதிப்பு : அக்டோபர், 1988

விலை ரூ. 1-00

STAR PUBLICATIONS
72, Big Street,
Triplicane, : : Madras-600 005
Phone : 844740

அச்சிட்டோர்:

எல். ஆர். ஆர். ஆர்ட் பிரிண்டர்ஸ்,
39, காரணீஸ்வரர் பகோடா தெரு,
மைலாப்பூர், : : சென்னை-600 004.

C. SP. [illegible] 3/4

இறைவன் திருவருள் துணை

குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்

தாமிரபரணி நதியின் வடகரையில், ஸ்ரீ வைகுண்டம் என்று வழங்கும் நகரின் வடக்கில், ஸ்ரீ கைலாசம் என ஒரு பகுதி உண்டு. அங்கே பரம்பரையாகத் தமிழ்ப்புலமையும் முருகப் பெருமானிடம் பக்தியும் வாய்ந்த சைவ வேளாள குலத்தில், சண்முக சிகாமணிக் கவிராயர் தம் மனைவி சிவகாமசுந்தரி அம்மையாரோடு சிறப்பாக வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்குக் குமரகுருபரன் என்னும் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர்.

குமரகுருபரர் ஐந்து ஆண்டுகள் வரையில், பேச்சின்றி ஊமை போல இருந்து வந்தார். அது கண்டு பெற்றோர் மனம் வருந்தினர். அவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று, செந்திலாண்டவர் சந்நிதியிலே வளர்த்திட்டு, தாங்களும் வணங்கி விரதம் மேற்கொண்டனர்.

முருகப் பெருமான் திருவருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றல் பெற்று, கல்வியிலும் சிறப்புப் பெற்றார்.

பின்னர், 'கந்தர் கலிவெண்பா', 'கைலைக் கலம்பகம்' இயற்றினார்.

குமரகுருபரர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஞான சாஸ்திரங்களையும், திருவருளால் விரைவில் கற்றுத் தேர்ந்தார். பக்தி, ஞான வைராக்கியங்கள் இவரிடத்திலே உண்டாகி வரத் தொடங்கின.

பல சிவஸ்தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்தார். மதுரையிலே சில காலம் தங்கியிருந்தார். அப்போது ஸ்ரீ மீனாக்ஷி அம்மையின் மீது பிள்ளைத்தமிழ் பாடி மதுரையை ஆட்சி புரிந்த திருமலை நாயக்க மன்னர் முன்னிலையில் அரங்கேற்றினார். அதனை அரங்கேற்றுகையில் ஸ்ரீமீனாக்ஷி அம்மையே குழந்தை உருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்ததோடு, குமரகுருபரர் முத்தப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில்,

தம் கழுத்திலிருந்த முத்துமாலை ஒன்றை எடுத்து இவருக்கு அணிவித்து விட்டு மறைந்தனர்.

அந்தப் பிள்ளைத்தமிழைக் கேட்டு, மனமுவந்த திருமலை நாயக்க மன்னர் குமரகுருபரருக்குப் பலவகையான பரிசுகளை அளித்து கௌரவித்தார்.

பிறகு, சிலகாலம் மதுரையிலே தங்கி, 'மதுரைக் கலம்பகம் இயற்றினார். பின்னர் சோழநாட்டு ஸ்தலங்களைத் தரிசிக்கத் தொடங்கி திருவாரூருக்குச் சென்றார். அங்கே ஸ்ரீ தியாகராசப் பெருமானைத் தரிசித்து, 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் பிரபந்தத்தை இயற்றினார்.

சிவஞான உபதேசம் பெறவேண்டும் என்ற கருத்து இவருக்கு வர வர அதிகமாயிற்று. தமக்குரிய ஞானாசிரியரைத் தேடிப் பெற ஆவல் கொண்டார். அப்பொழுது திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தின் நான்காம் பட்டத்தின் குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சிவஞானச் செல்வராக இருப்பதை அறிந்து அவரிடம் சென்றார்.

தமக்குத் துறவு நிலை அருள வேண்டும் என்று குமரகுருபரர் அவரிடம் வேண்டினார். அங்ஙனம் செய்வதற்கு முன் ஸ்தல யாத்திரை செய்து வரும்படி பணித்தல் அவ்வாதீனத்தின் மரபு ஆதலால், காசி யாத்திரை செய்து வருமாறு கட்டளையிட்டார். காசிக்குச் சென்று வருவதற்கு நெடுங்காலம் செல்லுமேயென்று கவலையுற்றார் குமரகுருபரர். அது கண்டு சில காலம் சிதம்பர வாசமேனும் செய்து வருமாறு பணித்தார் ஆதீனகர்த்தர்.

குமரகுருபரர், ஞானாசிரியர் கட்டளைப்படி சிதம்பரத்துக்குப் பிரயாணமாகி, இடையே வைத்தீசுவரன் கோவிலில் தங்கி, தரிசனம் செய்து கொண்டு, இங்கே ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி மீது ஒரு பிள்ளைத் தமிழ் இயற்றினார். பிறகு சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தரிசனம் செய்து, அங்கே சிலகாலம் தங்கி

யிருந்தார். அப்போது, 'சிதம்பர மும்மணிக் கோவை என்னும் பிரபந்தத்தை இயற்றினார். சிவநேசச் செல்வர்களும் தமிழறிவுடையவர்களுமாகிய சில அன்பர்கள், 'யாப்பருங்கலக்காரிகை'யில் காணப்படும் உதாரணச் செய்யுட்கள் பெரும்பாலும் சமண சமயச் சார்புடையனவாக இருத்தலால், அந்நூலின் இலக்கணங்களுக்கு உதாரணமாக ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பற்றிய செய்யுட்களை இயற்றித் தரவேண்டும் என வேண்டிக் கொண்டனர். குமரகுருபரர் அங்ஙனமே 'சிதம்பரச் செய்யுட் கோவை' என்னும் பிரபந்தத்தை இயற்றி அருளினார்.

இவர் சிதம்பரத்தில் இருந்த காலத்திலேயே 'நீதி நெறி விளக்கம்' என்னும் நீதி நூலை இயற்றி அருளினார். [இவர் மதுரையில் இருந்த பொழுது, திருமலை நாயக்க மன்னரின் வேண்டுகோளின்படி இது இயற்றப்பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர்.]

குமரகுருபரர் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு, தம் ஞானாசிரியரிடம் சென்று, தம்முடைய ஆவலை மீண்டும் விண்ணப்பித்துக் கொண்டார். இவருடைய பரிபக்குவத்தை அறிந்த ஞானதேசிகர், இவருக்குத் துறவு நிலையை உதவினார். அது முதல் இவர் குமரகுருபர முனிவர் எனப் பெயர் பெற்றார். அப்பொழுது தம் ஞானாசிரியரைப் பற்றிப் 'பண்டார மும்மணிக் கோவை' என்ற பிரபந்தத்தை இயற்றினார்.

பின்னர், ஞானதேசிகரிடம் விடைபெற்றுக் காசிக்குச் சென்று, தம்முடைய ஆழ்ந்த கல்வியறிவினாலும் தவப் பண்பினாலும் டில்லி பாதுஷாவின் உள்ளத்தைக் கவர்ந்தார். பாதுஷாவின் தாய்மொழியாகிய இந்துஸ்தானியை விரைவில் கற்றுக்கொள்ள ஆவல் கொண்டு 'சகலகலா வல்லிமாலை யென்னும் பிரபந்தத்தை இயற்றிக் கலைமகளை வேண்டினார்' கலைமகளின் திருவருளினால், இந்துஸ்தானியில் சிறந்த புலமை பெற்று, பாதுஷாவிடம்

பேசிப் பழகினார். அவர் இவரிடம் மிகவும் ஈடுபட்டு, காசியில் இருப்பதற்கான மடம் அமைப்பதற்காக கேதார கட்டத்தில் இடமும் பொருளும் உதவினார்.

'சகலகலாவல்லி மாலை'யின் கடைசிப் பாடலில், 'மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என் பண் கண்ட அளவில் பணியச் செய்வாய்...' என வேண்டிக் கொண்டார். அதன்படி மன்னன் பாதுஷாவும் குமரகுருபரரின் வேண்டுகோளுக்குப் பணிந்து வேண்டிய உதவியை அளித்தது குறிப்பிடத்தக்க பெருமையாகும்.

மன்னர் மறைக்கப்பட்டிருந்த ஸ்ரீ விசுவலிங்கப் பெருமானை வெளிப்படுத்தி, அங்கே கோயில் முதலியன அமைத்து, நித்திய நைவேத்தியங்கள் நடைபெறச் செய்தார் குமரகுருபரர்.

குமரகுருபர முனிவர் காசியில் தங்கியிருந்த மடத்துக்குக் குமாரசாமி மடம் என்று பெயர். அங்கே முனிவர் சிவயோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அப்பொழுது, 'காசித் துண்டி விநாயகர் பதிகமும்; 'காசிக் கலம்பக'மும் இயற்றினார்.

இவர் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி, இந்துஸ்தானியிலும் தமிழிலும் புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். புகழ் பெற்ற ராமபக்தரான துளசிதாசர் அந்தச் சொற்பொழிவுகளைக் கேட்டு வந்ததோடு கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களை, தாம் இந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக் கொண்டார் என்றும் கூறுகின்றனர்.

குமரகுருபரர் மீண்டும் ஒருமுறை தருமபுரம் வந்து, தம் ஞானாசிரியரைத் தரிசித்து, மறுபடியும் காசிக்குச் சென்று வாழ்ந்து சிறப்பெய்தி, ஒரு வைகாசி மாதத்தில் கிருஷ்ணபட்ச திருதியையிலே சிவபெருமான் திருவடி அடையப் பெற்றார்.

சகலகலாவல்லி மாலை

என் உள்ளக் கமலத்தில் உறைவாயாக!

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்கஎன்
வெள்ளை உள்ளம்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே 1

கருத்துரை

1. ஏழு உலகங்களையும் காத்து, ஊழிக்காலத்தில் அவற்றை உண்டவனாகிய மகாவிஷ்ணு நித்திரையில் ஆழ்ந்திருக்க, அவ்வுலகங்களை அழிப்பவனாகிய சிவ பெருமான் பித்தனாக, படைக்கும் முறையை அறிந்த வனான பிரம்மா சுவையாகக் கொண்டு ருசிக்கின்ற கரும் பைப் போன்றவளே! சகலகலா வல்லி என்னும் பெயரை உடையவளே! உன் பாதங்களைத் தாங்க வெள்ளைத் தாமரைக்கே அல்லாமல் என்னுடைய களங்கமற்ற உள்ள மாகிய குளிர்ச்சியான தாமரை மலருக்குத் தகாதோ?

பாடும் பணி எனக்கு அருள்வாயாக

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும்பணியில் பணித்து அருள்வாய்பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே 2

---

2. தாமரை மலராகிய ஆசனத்தில் இணைந்திருக்கின்ற பசுமையான பொற்கொடியைப் போன்றவளே' கனதனமான குன்றுபோன்ற கொங்கையையும், ஐந்து வகையாகச் செய்யப் பெற்ற கூந்தல் வனத்தையும் தாங்கிக் கொண்டிருக்கின்ற கரும்பைப் போன்ற சகலகலா வல்லியே! ஒன்பது வகையான இனிமைகளும் பொருந்திய பொருட்சுவையும், இனிமையான சொற்சுவையும் ஆசு, மதுரம, சித்திரம், வித்தாரம் ஆகிய நான்கு வகையான செய்யுட்களைப் பாடுவதற்குரிய பணிக்கு அடியேனை இருத்தி அருள்வாய்ாக!

உன் அருட்கடலில் குளிக்க அருள் புரிவாயாக!

அளிக்கும் செந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன்
அருட் கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடுங்கொலோ உளம்
கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே சகலகலாவல்லியே! 3

---

3. மனம் உவந்து கொழித்து, தெளிக்கின்ற புலவர்கள் கவி மழை பொழிவதைப் பார்த்துக் களிப்படைகின்ற தோகை மயிலைப் போன்றவளே! சகலகலைகளையும் உணர்ந்த கொடியைப் போன்றவளே! உன்னால் அருளப்பட்ட செழிப்புடைய் தமிழாகிய தெள் அமுதத்தை உண்டு, உன் அருட் கடலில் குளிப்பதற்கு எனக்கு இயலுமோ?

கல்வியும் வாக்குவன்மையும் பெருகிட அருள்வாயாக!

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை
தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல்
கடலும்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்
செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே! 4

---

4. வடமொழியான கடலையும் இனிமையான தமிழ்ச் செல்வத்தையும் தொண்டர்களுடைய செவ்விய நாவினில் இருந்து காக்கும் அருட்கடலே? சகலகலா வல்லியே! சீர்தூக்கிப் பெறுகின்ற பல நூல் பகுதிகளிலும் சார்ந்த கல்வியையும் சொற்சுவை நிறைந்த வாக்கு வன்மையையும் எனக்கு அதிகரிக்கும்படியாக அருள் கூர்வாயாக.

என் உள்ளத்தில் மலர அருள்வாயாக !

பஞ்சப்பு இதம்தரும் செய்யப் பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே! 5

---

5. நீளமான தண்டுகளுடைய தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட, அன்னக்கொடியை உயர்த்திய நான்முகனின் செவ்விய நாவினிலும் உள்ளத்திலும் வெள்ளைத் தாமரை மலரின் ஆசனத்தைப் போல் கருதி அமர்ந்திருக்கும் சகலகலாவல்லியே! நன்மையைத் தருகின்ற செம்பஞ்சு ஊட்டப் பெற்ற சிவந்த அழகான உன் பொற்பாதங்களாகிய தாமரை மலர் என் உள்ளத் தடாகத்தில் மலராததற்குக் காரணம் யாதோ?

எண்ணும்பொழுது எளிதில் தோன்றச் செய்வாயாக!

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல் காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே! 6

---

6. எழுதுவதற்கு அரிய ஒலிவடிவமாகத் திகழும் வேதத்திலும், விண்ணிலும், மண்ணிலும், நீரிலும் நெருப்பிலும், விரைந்த காற்றிலும், அன்பர்களின் கண்களிலும், கருத்திலும் நிறைந்திருக்கும் சகலகலா வல்லியே! பண்ணும், பரதமும், கல்வியும், (முத்தமிழும்) இனிமையான சொற்களையுடைய நூலும், நான் எண்ணும்பொழுது எளிதில் தோன்றுமாறு அருள் புரிவாயாக!

பாட்டும் பொருளும் பயனும் சேர்ப்பிப்பாயாக!

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டு
தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும்
வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலா வல்லியே! 7

---

7. அடியார்கள் திருவுள்ளம் கொண்டு எழுதுகின்ற கலைத் தமிழ் நூல்களாகிய சுவையான பால் அமுத்தைத் தெளியும்படி செய்து காட்டுகின்ற வெள்ளை நிறப் பெண் அன்னமான சகலகலாவல்லியே! பாடலையும் அதன் பொருளையும் பொருளால் உண்டாகின்ற பயனையும் என்னிடத்திலே சேரும்படியாக உன்னுடைய கடைக் கண் பார்வையை அருள்வாயாக!

எல்லாம் எனக்கு அருளி ஆட்கொள்வாயாக!

சொல்லிற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின
ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை
நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலா வல்லியே 8

---

௮. தாமரை மலரான ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற திருமகளுக்கு அரிது என்று கருதி ஒரு காலத்திலும் சிதையாமல் இருக்கும்படி அருள் புரிகின்ற கல்வியயாகி பெருஞ் செல்வப் பயனான சகலகலாவல்லியே! சிறப்பான சொல் ஆற்றலும், அவதானம் செய்கின்ற சக்தியும். கல்வியைப் போதிக்கத் தக்க புலமையும் எனக்கு அருளி, என்னை ஆட்கொள்வாயாக!

சொல்லுக்கும் பொருளுக்கும் உயிரானமெய்யறிவே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின்
தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம்
தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரச அன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே! 9

---

9. பூமியில் படிகின்ற துதிக்கையையுடைய நல்ல பெண் யானையோடு ராஜ அன்னமும் நாணும்படி நடை பழகுகின்ற திருவடித் தாமரையை உடைய சகலகலா வல்லியே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராகிய மெய் யறிவின் காட்சி என விளங்கக் கூடிய உன்னை நினைக்க வல்லவர் யார்?

மன்னரையும் பணியச் செய்வாயாக!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே! 10

---

10. படைக்கும் தொழில் புரியும் நான்முகன் முதலான தெய்வங்கள் விண்ணுலகில் கோடிக் கணக்கில் இருந்த போதிலும் கூறுமிடத்திலே உன்னைப் போன்ற கண்கண்ட தெய்வம் வேறு ஏதேனும் இருக்கின்றதோ? சகலகலாவல்லியே! வெண் கொற்றக் குடை நிழலிலே வீற்றிருந்து நிலவுலகத்தை ஆட்சி செலுத்தும் மன்னர்களும் பண் நிறைந்த என்னுடைய பாடல்களைக் கேட்டவுடனே என்னைப் பணியுமாறு செய்து அருள்வாயாக!

(சகலகலாவல்லி மாலை மூலமும் உரையும் முற்றும்)